

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பணியாற்றும் 1 முதல் 5 ஆம் வகுப்பு ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி வழங்கும் நிகழ்வினை, 15.07.2024 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில், திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட கண்டவராயன்பட்டி, ஸ்ரீ பணிச்சாருடையவர் தரும கலாசாலை நடுநிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அ.பாலுமுத்து மற்றும் ஸ்ரீ பணிச்சாருடையவர் தரும கலாசாலை நடுநிலைப்பள்ளி செயலர் சிதம்பரம் உட்பட பலர் உள்ளனர்.



குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 489 பயனாளிகளுக்கு ஆணை வழங்கும் விழாவில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி. எம்.கதிர் ஆனந்த் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றியக்குழு தலைவர்கள் சத்தியானந்தம், இரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர் ரவி, அன்பரசு, பிரதீஷ், சீதாராமன், முருகேசன், ஊரக உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறை அதிகாரிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்டத்தில்

# விரிவாக்கப்பட்ட காலை உணவுத் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்து பேச்சு!



நீலகிரி, ஜூலை 18-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டத்தில், ஊரக பகுதிகளில் அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யும்; பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு உணவு வழங்கி, குழந்தைகளுடன் உணவு அருந்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில், ஊரக பகுதிகளில் அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், மேலூர் ஊராட்சி, உட்லாண்ஸ் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்து, பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவினை வழங்கி, அவர்களுடன் உணவருந்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக பள்ளிக்கு வரும் குழந்தைகள் பசியின்றி கல்வி கற்பதை உறுதி செய்யும் வகையில் உலகத்திற்கே முன்னோடி திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2022 அன்று முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஸ்ரீமதுரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் மிகவும் பயனுள்ள வகையில் அமையப்பெற்றதால் இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வழங்க வேண்டும் என்ற உன்னத நோக்கில் இன்றைய தினம் திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைத்து, பள்ளி மாணவ, மாணவிகளுடன் உணவு அருந்தினார்.

முதலமைச்சர் அவர்களால் அறிவித்து செயல்படுத்திவரும்முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 14,40,351 மாணாக்கர்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும், தமிழ்நாடு திட்டக்குழு இத்திட்டத்தினை பல்வேறு ஆய்வுகளின் மூலம் மதிப்பீடு செய்துள்ளது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவர்களிடம் மட்டுமல்லாமல் பெற்றோர்களிடமும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் மூலம் சத்தான உணவினை வழங்குவதன் காரணமாக பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. வேலைக்கு செல்லும் தாய்மார்களின் சுமை குறைந்துள்ளது. பசியின்றி குழந்தைகள் சத்தான உணவு உட்கொள்வதால் குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் படிப்புத் திறன் அதிகரித்துள்ளது. பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லா குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும், எந்த தியாகத்தையும் செய்திடுவோம் என்பது தமிழ்நாடு அரசின் உன்னத நோக்கமாகும். அதன்படி, தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் உள்ள அரசு உதவிப் பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை இந்த திட்டம் விரிவுப்படுத்தப் பட்டுள்ளது. கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படும் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் இத்திட்டத்தினை விரிவுப்படுத்திட ஆணையிட்டதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் உதகை வட்டாரத்தில் 8 அரசு உதவி பெறும் துவக்க பள்ளிகளிலும், குன்னூர் வட்டாரத்தில் 9 பள்ளிகளிலும், கோத்தகிரி வட்டாரத்தில் 8 பள்ளிகளிலும், கூடலூர் வட்டாரத்தில் 1 பள்ளியிலும் என மொத்தம் 26 அரசு உதவிப்பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 466 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

ஏற்கனவே நமது மாவட்டத்தில் முதற்கட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தில் கூடலூர் வட்டாரத்தில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 63 அரசு தொடக்கப் பள்ளிகளில் 2,749 மாணவ, மாணவியர்களும், இரண்டாம் கட்டமாக கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள 203 அரசு தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் விரிவாக்கம் செய்யப்பட்டதன் மூலமாக 6,353 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் 266 அரசு தொடக்க பள்ளி மற்றும் நடுநிலை பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 9,102 மாணவ, மாணவியர் பயன்பெற்றுள்ளனர்.

அதேபோல் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தில் ஒருங்கிணைந்த சமையல் கூடத்தின் மூலம் உதகை நகராட்சிக்குட்பட்ட 8 பள்ளிகளில் 457 மாணவ, மாணவியர்களும், குன்னூர் நகராட்சிக்குட்பட்ட 5 பள்ளிகளில் 168 மாணவ, மாணவியர்களும், கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 6 பள்ளிகளில் 661 மாணவ, மாணவியர்களும், நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 5 பள்ளிகளில் 310 மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 24 பள்ளிகளில் 1,596 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல், நீலகிரி மாவட்டத்தில் இதுவரை கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 1.12 இலட்சம் மகளிர்களும், புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 1,031மாணவியர்களும், விடியல் பயணத்தின் மூலம் 50,000 மகளிர்களும், மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் 1,67,317 பயனாளிகளும், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ் 30,653 பயனாளிகளும், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின்கீழ் 975 பயனாளிகளும் பயன்பெற்றுள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுபேற்றது முதல் நமது மாவட்டத்தில் இதுவரை வேலைநாடுநர்களுக்கு 6 தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 580 நிறு வனங்களில் 3,101 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தில் நமது மாவட்டத்தில் முதற்கட்டமாக 1,334 பயனாளிகளுக்கு வீடு கட்டப்படவுள்ளது. அந்த வகையில் இன்று வரை 539 வீடுகளுக்கான முதற்கட்ட பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களாகிய நீங்கள் இத்திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்து, கோடேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவியர்களின் வரவேற்பு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, உட்லாண்ஸ் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை கற்பிக்கும் குன்னூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 248 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி (TABLET) வழங்கும் அடையாளமாக 10 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினிகளையும் (TABLET), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பாக 43 மாணாக்கர்களுக்கு விலையில்லா மழைக் கோட்டு, கம்பளிச்சட்டை, மழைக்கால காலனி, செருப்பு ஆகியவற்றையும் வழங்கும் அடையாளமாக 6 மாணாக்கர்களுக்கு வழங்கினார். மேலும், சுற்றுலாத்துறை அமைச்சர், கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்கீழ் 7 பயனாளிகளுக்கு தலா ரூ.3.53 இலட்சம் மதிப்பில் வீடுகள் கட்டுவதற்கான வேலை உத்தரவு ஆணையினையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திருமதி.சுனிதாநேரு, உதவி திட்ட அலுவலர்கள் அருண், விஜய்குமார், குன்னூர் வட்டாட்சியர் கனி சுந்தரம், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்ரமணி, மேலூர் ஊராட்சித்தலைவர் திருமதி.ரேணுகாதேவி, பள்ளி தலைமையாசிரியர் சிவக்குமார், வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இளையான்குடி ஒன்றியம்

# வடக்கு அண்டக்குடியில் பல்நோக்கு வணிக வளாகம்!

## திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சிவகங்கை. ஜூலை 18.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் வடக்கு அண்டக்குடியில் ஊராட்சியின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு வணிக வளாகத்தினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், இளையான்குடி ஒன்றிய குழு தலைவர் முனியாண்டி, கிழக்கு ஒன்றிய செயலாளர். வே.தமிழ் மாறன், கூட்டுறவு சங்கத் தலைவர் சுப. தமிழரசன், விவசாய அணி பா.காளி முத்து, மானாமதுரை தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் சுப. அன்பரசன், கண்ணன் தொண்டரணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி,

நிர்வாகிகள் சாரதி, ராஜ பாண்டி, வே.கருணாகரன் சிவனேசன், ராஜேந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர் சண்முகம், கிளைச் செயலாளர்கள் சந்தனம்,கோவிந்த ராசு, நீலமேகம் உட்பட கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயகுமார் வரவேற்றுப் பேசினார்

வட்டார வளர்ச்சி அலுவலர்முத்துகுமார் நன்றி கூறினார்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# 40ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவுத் திட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, ஜூலை 18-

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் கடந்த 15ஆம் தேதி ஊரகப்பகு திகளில் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான காலை உணவு திட்டத்தை திருவள்ளூர் மாவட்டத்தில் துவக்கி வைத்தார்.

முதல்வரின் ஆணையின் படி சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் தொகுதி கண்டவராயன் பட்டி ஸ்ரீபணிக்கருடையார் தருமகலா சாலை நடுநிலைப் பள்ளியில் முதல்வரின் காலை உணவுத் திட்டத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து பேசியதாவது.

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அத்தனை திட்டங்களும் முத்தான திட்டங்களாகும். நாளுக்கு நாள் தொலைநோக்கு சிந்தனையுடன் பொதுமக்க. ளுக்கு பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து அதற்கான நிதியினை ஒதுக்கி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இதில் குறிப்பாக பள்ளி கல்வித்துறையில் மாணவர்களின் எதிர்காலத்தை கருதி மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப கற்றல், கற்பித்தல், முறைகளுக்கு ஏற்ப அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கையடக்க கணினியும் முதல்வர் துவங்கி வைத்துள்ளார். அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் 259 பள்ளிகளில் 2161 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாணவர்களுக்கு எளிய முறையில் அவர்கள் கற்பிக்க முடியும். இது தவிர முதல்வரின் காலை உணவுத் திட்டம் மாவட்டத்தில் 10 59 பள்ளிகளில் 38 ஆயிரத்து 855 மாணவர்களுக்கு இன்று முதல் வழங்கப்படுகிறது. இதன் மூலம் சாதாரண, ஏழை ,எளிய கூலித் தொழிலாளியின் மகன்கள், காலை உணவினை பள்ளியில் சாப்பிட்டு நன்றாக படிக்க முடியும்.

இதை மாணவ - மாணவிகள் நல்ல முறையில் பயன்படுத்தி நல்ல முறையில் படித்து ஊருக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தான் முதல்வர். அவர்களும் விரும்புகிறார்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் திருப்பத்தூர் ஒன்றியக்குழு தலைவர் எஸ்.சண்முகவடிவேல், தேவகோட்டை கோட்டாட்சியர் எஸ் .பால்துரை, முதன்மை கல்வி அலுவலர் பாலமுத்து, ஊராட்சிகள் உதவி இயக்குனர் கேசவ தாசன், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி அபிராமி காந்திஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். பள்ளி செயலாளர் சிதம்பரம், வட்டாட்சியர் மாணிக்கவாச கம் ,தலைமை ஆசிரியர் மகாலிங்கம், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.



தேனி நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற தங்க தமிழ்ச்செல்வன் சின்னமனூர் மேற்கு ஒன்றிய பகுதிகளில் வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் சின்னமனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன்,மார்க்கையன்கோட்டை பேரூர் செயலாளர் ஓ.எ.முருகன் மாவட்ட பிரதிநிதிகள் ராதாகிருஷ்னன், பழனிவேல்ராஜன், சுருளி, கவுன்சிலர்கள் முரளி, ராமேஸ்வரி பன்னீர்செல்வம், ஜெயந்தி சிவகுமார், விவசாய அணி தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சிங்கராஜ், மாவட்ட மீனவர் அனி துணை அமைப்பாளர் மகேந்திரன், முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் விஜயராஜ் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று (18.07.2024) நன்றி தெரிவிக்கிறார்!



மதச் சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று (18.07.2024) காலை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**குடியாத்தம் ஒன்றியம்**

| ஊராட்சி | நன்றி அறிவிக்கும் இடம் | நேரம் |
|---|---|---|
| குடியாத்தம் வடக்கு ஒன்றியம் | | |
| புட்டவாரிபல்லி | நல்லகவுண்டனூர் | 8.00 |
| பரதராமி | பாரதாமி பஸ் நிலையம் | 8.15 |
| D.P.பாளையம் | ஊராட்சி மன்ற அலுவலகம் | 8.30 |
| V.P.பாளையம் | கொத்தூர் பஸ் நிலையம் | 8.45 |
| வரதாரெட்டிபல்லி | பண்டபல்லி | 9.00 |
| வீரிசெட்டிபல்லி | V.மோட்டூர் | 9.15 |
| கல்லப்பாடி | பஸ்நிலையம் | 9.30 |
| தாட்டிமானபல்லி | ஊராட்சி மன்ற அலுவலகம் | 9.45 |
| ராமாலை | ராமாலை | 10.00 |
| கொண்டசமுத்திரம் | காளியம்மன்பட்டி | 10.15 |
| கொண்டசமுத்திரம் | காந்திநகர் | 10.30 |
| குடியாத்தம் மேற்கு ஒன்றியம் | | |
| தனகொண்டபல்லி | தனகொண்டபல்லி | 11.00 |
| மோடிகுப்பம் | R.கொல்லப்பல்லி | 11.15 |
| சேங்குன்றம் | சேங்குன்றம் காலனி | 11.30 |
| சின்னாலபல்லி | காந்திநகர் | 11.45 |
| முக்குன்றம் | முக்குன்றம் காலனி | 12.00 |
| தட்டப்பாறை | தட்டப்பாறை | 12.15 |
| பாக்கம் | பாக்கம் | 12.30 |

| ஊராட்சி | நன்றி அறிவிக்கும் இடம் | நேரம் |
|---|---|---|
| குடியாத்தம் தெற்கு ஒன்றியம் | | |
| நெல்லூர் பேட்டை | லிங்குன்றம் | 3.00 |
| செருவங்கி | கார்த்திகேயபுரம் | 3.15 |
| செட்டிகுப்பம் | கீழ்செட்டிகுப்பம் | 3.30 |
| ராஜாகுப்பம் | ராஜாகுப்பம் | 3.45 |
| போஜனாபுரம் | சரகுப்பம் | 4.00 |
| செம்பேடு | செம்பேடு | 4.15 |
| குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் | | |
| தாழையாத்தம் | தங்கம் நகர் | 4.50 |
| மேல்முட்டுகூர் | தட்டாங்குட்டை | 4.45 |
| சிங்கல்பாடி | சிங்கல்பாடி | 5.00 |
| அனங்காநல்லூர் | மோட்டூர் | 5.15 |
| கொத்தகுப்பம் | கொத்தகுப்பம் | 5.30 |
| கூடநகரம் | கூடநகரம் | 5.45 |
| மேல்ஆலத்தூர் | மேல்ஆலத்தூர் | 6.00 |
| பட்டு | பட்டு | 6.15 |
| ஒலகாசி | ஒலகாசி காலனி | 6.30 |